பாடம்
24

# தாவீது

எருசலேமில் ஜெஸ்சே என்னும் ஒரு மனிதன் இருந்தார். அவருடைய இளைய மகன் தாவீது. தாவீது தன் தந்தையின் ஆடுகளை மேய்த்துக்கொண்டு ஒரு இடையனாக வாழ்ந்தார். அவர் வீணை வாசிப்பதில் வல்லவர். அவர் மந்தைகளை மேய விட்டுக் கொண்டு வீணை வாசித்த படியே இறைவனுக்கு இனிய பாடல்கள் இசைத்துப் பாடினார்.



அந்த நாட்களில் இஸ்ராயேல் மக்கள் பிலிஸ்தியருடன் சண்டை செய்துகொண்டிருந்தார்கள். இஸ்ராயேல் அரசனான சவுல் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றாது இறைவனுக்குக் கீழ்ப்படியாதிருந்தார்.

இறைவன் இறைவாக்கினரான சாமுவேலை அழைத்து, சவுல் அரசனுக்குப் பிறகு அரசனாக, எருசலேமில் வாழும் ஜெஸ்சேயின் மகனை அபிசேகம் செய்யும்படி கூறினார்.

சாமுவேல் அங்கே சென்று ஜெஸ்சேயின் பிள்ளைகளை அழைத்தார். ஏழு பிள்ளைகள் வந்தார்கள். ஆனால் ஒருவராவது இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகத் தெரியவில்லை. பின்னர் இளையவனும், இறைவனுக்கு விருப்புடையவனும் நல் வாழ்க்கை வாழ்பவனுமாகிய தாவீது அங்கே வந்தான். உடனே சாமுவேல் அவனை அணுகி அவன் தலையில் எண்ணெய் பூசி அவனை அபிசேகம் செய்தார்.

தாவீது தைரியசாலி, தன்னுடைய மந்தைகளை நோக்கி வரும் சிங்கம், கரடி முதலிய மிருகங்களைக் கொன்று மந்தைகளைப் பாதுகாத்தான்.

அந்நாட்களில் ஆட்சிபீடத்திலிருந்த சவுல் அரசனை மகிழ்ச்சிப் படுத்துவதற்கு வீணை வாசிக்கத் தாவீது அரண்மனைக்குப் போவான். தாவீதின் மீது விருப்பம் கொண்ட அரசன், அவனைச் சேவையில் சேர்த்துக் கொண்டார்.

இஸ்ராயேல் மக்களுக்கு எதிராகப் பிலிஸ்தியர்கள் மீண்டும் யுத்தத்திற்கு வந்தார்கள். அவர்களுடைய படையில் கோலியாத் என்னும் அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் 40 நாட்களாக "என்னோடு சண்டையிட யார் இருக்கிறார்கள் பார்க்கலாம்" என்று சொல்லி, இஸ்ராயேல் படையினரை ஏளனம் செய்தான். இதை அறிந்த தாவீது அரசனிடம் சென்று போர்க்களம் செல்ல அனுமதி கேட்டுப் பெற்றுக்கொண்டான்.

போர்ப் பயிற்சி அற்ற தாவீது, இறைவனில் முழு நம்பிக்கை வைத்துச் சில கூழாங்கற்களையும் ஒரு கவணையும் எடுத்துக்கொண்டு சென்றான்.

தாவீதைக் கண்ட கோலியாத், ஒரு இடையன் என்னைச் சிறுமைப்படுத்துகிறான் என்று வசை கூறிக்கொண்டு முன்நோக்கி வந்தான். தாவீது இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு கல்லை எடுத்துக் கவணில் வைத்து சுழற்றிக் குறிபார்த்து எறிந்தான். கல் கோலியாத்தின் நெற்றியினைத் துளைக்க அவன் நிலை தடுமாறி நிலத்தில் வீழ்ந்தான். ஓடிச் சென்ற தாவீது, கோலியாத்தின் வாளை எடுத்து அவன் கழுத்தை அறுத்து வெற்றியை உறுதிப்படுத்தினான்.

தாவீதின் இந்த வீரச் செயலைக் கேள்விப்பட்ட அனைவரும் அவனைப் பாராட்டினர். ஆனால் சவுல் அரசன் அவன் மீது பொறாமை கொண்டு கொலை செய்ய முயற்சி செய்தான். அரசனிடமிருந்தும் படைகளிடமிருந்தும், தப்புவதற்காகத் தாவீது எங்கெல்லாமோ ஓடினான். அரசனைக் கொல்லுவதற்கு அரிய சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும், அவன் அதைச் செய்து இறை அன்பை இழந்து போக விரும்பவில்லை.

சவுல் சாகும் வரை இறைவன் தாவீதைக் காப்பாற்றி வந்தார். சவுல் அரசனின் மறைவிற்குப் பின் தாவீது அரசனானான். பகைவர்கள் அனைவரையும் இறை அருளால் முறியடித்துச் சமாதானமும், நிறைவும் உள்ள ஆட்சி நடத்தினான். இறைவன் மக்களோடு இருக்கிறார் என்பதற்கு அடையாளமாக, உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்குக் கொண்டு வந்து உரிய மரியாதை செய்தான்.

இறைவனோடு அழியாத உடன்படிக்கை செய்து கொண்ட தாவீதின் பரம்பரையில் இறைமகன் மனிதாவதாரம் எடுக்கச் சித்தம் கொண்டார்.

**ஒப்படை :**

1. பாடத்தில் தாவீது அரசனிடத்தில் காணப்பட்ட நற்பண்புகள் மூன்று எழுதுக.

2. கீழ்வரும் பாடலைப் பாடுங்கள்

**உன்புகழைப் பாடுவது**

உன்புகழைப் பாடுவது - என்
வாழ்வில் இன்பமையா
உன் அருளைப் போற்றுவது - என்
வாழ்வின் செல்வமையா.

1

துன்பத்திலும் இன்பத்திலும் - நல்
தந்தையாய் நீ இருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் - நல்
அன்னையாய் அருகிருப்பாய்
அன்பு என்னும் அமுதத்தினை - நான்
அருந்திட எனக்களிப்பாய்
உன் னின்று பிரியாமல் - நீ
என்றும் அணைத்திருப்பாய்.

11

பல்லுயிரைப் படைத்திருப்பாய் - நீ
என்னையும் ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் - நீ
என்னையும் ஏன் அழைத்தாய்
அன்பினுக்கு அடைக்கும் தாள் - ஒன்று
இல்லையென்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல் - நான்
என்றும் வாழ்ந்திருப்பேன்.

## பொதுச் செபங்கள்

1. பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்.

2. மங்கள வார்த்தைச் செபம்

அருள் நிறைந்த மரியாயே வாழ்க! கர்த்தர் உம்முடனே பெண்களுக்குள்ளே ஆசிர்வதிக்கப்பட்டவள் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசிர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாயே! சருவேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் ஆமென்.

3. (கர்த்தர் கற்பித்த செபம்.)

இயேசு கற்றுத் தந்த செபம்.

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருக. உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக.

எங்கள் அநுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்குத் தீமை செய்பவர்களை நாங்கள் பொறுப்பது போல, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களைச் சோதனையிலே விழ விடாதேயும், தீமையிலே நின்று எங்களை இரட்சித்தருளும். ஆமென்.

4. திரித்துவ ஆராதனை.

பிதா, சுதன் பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாவதாக.

ஆதியில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக ஆமென்.

**காவற் சம்மனசு செபம்**

எனக்குக் காவலாயிருக்கிற இறைவனுடைய சம்மனசானவரே! தேவ கிருபையால் உம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்ட என்னை இன்றைய நாள் முழுவதும் பாதுகாத்துக் காப்பாற்றி வழிநடத்தி யருளும். ஆமென்.

**தூயாவியின் செபம்**

தூயாவியே! எழுந்தருளி வாரும். இறை மக்களின் உள்ளங்களை உமது ஒளியால் நிரப்பியருளும். அவற்றில் அன்புத் தீயை மூட்டியருளும். உமது ஞானக் கதிர்களை வரவிடும். அதனால் உலகைப் புதுப்பித்தருளும்.

**செபிப்போமாக**

இறைவா, உம் மக்களின் உள்ளங்களைத் தூயாவியின் ஒளியால் தெளிவுபடுத்தினீரே; அத்தூயாவியால் நாங்கள் சரியானவற்றை உணரவும், அவருடைய ஆறுதலால் மகிழ்வு பெறவும், அருள் புரிவீராக. இவற்றை எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**மன்னிப்பு வேண்டல்**

என் ஆண்டவரே! அளவில்லாத அன்பிற்குப் பாத்திரமாயிருக்கிற உம்மை மதியாமல் அடியேன் பாவங்கள் பல செய்ததினால் முழுமனதுடனே துக்கப்படுகிறேன். இறைவா, இனிமேல் உமது உதவியினாலே ஒரு போதும் பாவம் செய்யமாட்டேன் என்றும், பாவத்திற்கு ஏதுவான சந்தர்ப்பங்களை விட்டு விடுகிறேன் என்றும் வாக்குப்பண்ணுகிறேன்.

எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து பாடுபட்டு அடைந்த மட்டில்லாத பேறு பலன்களைப் பார்த்து, என் பாவங்களைப் பொறுத்தருள மன்றாடுகிறேன். என்பாவங்களைப் பொறும் ஆண்டவரே, என் பாவங்களைப் பொறும் ஆண்டவரே, என் பாவங்களை எல்லாம் பொறுத்தருளும் ஆண்டவரே, ஆமென்.

மூவேளைச் செபம்

1. ஆண்டவருடைய சம்மனசானவர் மரியாளுக்கு மங்களம் சொல்ல அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்.
அருள் நிறைந்த மரியாயே! .......................

2. இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த்தையின் படியே எனக்காகக் கடவது.
அருள் நிறைந்த மரியாயே .................

3. வார்த்தையானது மாமிசமாகி எங்களுடனே வாசமாயிருந்தார்.
அருள் நிறைந்த மரியாயே.

இயேசுக்கிறிஸ்து நாதருடைய திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாக இருக்கத் தக்கதாக.

சருவேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

செபிப்போமாக

சருவேசுரா சுவாமி! உமது குமாரனாகிய இயேசுக்கிறிஸ்து மனிதனானதைச் சம்மனசானவர் சொன்னதனால் அறிந்திருக்கிற நாங்கள், அவருடைய பாடுகளினாலும் சிலுவையினாலும் உத்தானத்தின் மகிமையை அடையத்தக்கதாக எங்களுக்கு அனுக்கிரகம் பண்ணியருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்களாண்டவராகிய இயேசு நாதருடைய நாமத்தினாலே வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

பிதா, சுதன், பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாவதாக. ஆதியில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக ஆமென். ( மூன்று முறை)

## பாடல்கள்

1. ஆவியானவரே

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே
இப்போ வாரும் எழுந்து வாரும்
எங்கள் மத்தியிலே //

உளையான சேற்றினில் நின்று
தூக்கி எடுத்தவரே //
பாவம் கழுவித் தூய்மையாக்கும்
இந்த வேளையிலே. //

2. அம்மா உந்தன் அன்பினிலே

அம்மா உந்தன் அன்பினிலே
அருள்வாய் எமக்கு அடைக்கலமே

இறைவன் படைத்த எழிலே
இயேசுவைத் தந்த முகிலே
தூய்மை பொழியும் நிலவே
துணையே வாழ்வில் நீயே.

3. சின்ன இயேசுவை

சின்ன இயேசுவே - நான்
இன்று சொந்தம் உமக்கே //

என் கண் காது வாய் இருதயம்
யாவற்றையும் உந்தனுக்கே //
என்னை முழுதும் உண்மையாகவே
இதோ நான் காணிக்கையாகத் தருகின்றேன்.

என் சிந்தனை சொல் செயல் யாவையும்
எந்நாளும் உமக்கே
என்னை முழுதும் உண்மையாகவே
இதோ நான் காணிக்கையாகத் தருகின்றேன்.

### என் பிழை எல்லாம் பொறுத்தருள்வாய்

என் பிழை எல்லாம் பொறுத்தருள்வாய்

1. செந்நீர் வியர்வை சொரிந்தவரே
   என் பிழை எல்லாம் பொறுத்தருள்வாய்.
2. புண்படக் கசையால் துடித்தவரே
   என் பிழை எல்லாம் பொறுத்தருள்வாய்
3. முள் முடி சூடிய மன்னவரே
   என் பிழை எல்லாம் பொறுத்தருள்வாய்
4. துன்பச் சிலுவை சுமந்தவரே
   என் பிழை எல்லாம் பொறுத்தருள்வாய்
5. தன்னுயிர்த் தியாகம் புரிந்தவரே
   என் பிழை எல்லாம் பொறுத்தருள்வாய்.

**விசுவாச மந்திரம்**

1. பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.
2. அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாயகன் இயேசுக் கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன்.
3. இவர் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பமாய் உற்பவித்துக் கன்னி மரியம்மாள் இடத்தில் நின்று பிறந்து
4. போன்சியோ பிலாத்துவின் கீழ் பாடுபட்டுச் சிலுவையிலே அறையுண்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.
5. பாதாளங்களிலே இறங்கி மூன்றாம் நாள் மரித்தவர்கள் இடத்தில் நின்று உயிர்த்தெழுந்தருளினார்.
6. பரலோகத்திற்கு எழுந்தருளிச் சர்வ வல்ல பிதாவாகிய சர்வேசுரனின் வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார்
7. அவ்விடத்தில் நின்று சீவியர்களையும், மரித்தவர்களையும் நடுத்தீர்க்க வருவார்.
8. பரிசுத்த ஆவியையும் விசுவசிக்கிறேன்.
9. பொதுவாயிருக்கிற புனிதர்களுடைய சபையையும்
10. புனிதர்களுடைய ஐக்கியப் பிரயோசனத்தையும்
11. பாவப் பொறுத்தலையும் மாமிச உத்தானத்தையும்
12. நித்திய சீவியத்தையும் விசுவசிக்கிறேன் ஆமென்.